


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (29.11.2025) அன்று நள்ளிரவு எழிலகத்தில் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், எல்.ஈ.டி திரை மூலம் டித்வா புயலின் நகர்வுகள் கண்காணிக்கப்படுவதையும், மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம் கோட்டூர் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியப்பகுதிகளில் மழை வெள்ளம் பாதித்த விவசாய நிலங்களை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா , மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. , தாட்கோ தலைவர் நா.இளையராஜா ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறியதோடு மேல்நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளிடம் ஆலோசனை கூறினர்.மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனசந்திரன் , மாரிமுத்து எம்.எல்.ஏ. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் அழகு.ராஜா ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல்,இரா.மனோகரன்,கே.வி.கே.ஆனந்த், மாவட்ட விவசாய தொழிளாலர் அணி அமைப்பாளர் க. அன்பழகன்,பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமை! விக்கி (எ) பா.விக்னேஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

# கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆணழகன் போட்டி!

## ஆ.இராசா - வி.செந்தில் பாலாஜி - கே.இ.பிரகாஷ் - இரா.ராஜீவ்காந்தி பரிசுகள் வழங்கி சிறப்புரை!

கோவை, டிச, 1-

கோவை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் இந்தியன் பிட்னஸ் பெடரேசன் இணைந்து 6 வது மிஸ்டர் உதயநிதி கிளாசிக் எனும் தலைப்பில் தென்னிந்திய அளவிலான ஆணழகன் போட்டி (29.11.2025 சனிக்கிழமை) அன்று காலை 8.00 மணி முதல் கோவை, நெ.4 வீரபாண்டி, நாயக்கனூர் பாலாஜி மஹாலில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விக்கி (எ) ப.விக்னேஷ் குமார் ஒருங்கிணைப்பில் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஏ.ஆர்.கே.ஹக்கீம், துணை அமைப்பாளர்கள் வே.சூரியன் தம்பி, எம். மனோஜ், உதயநிதி பாபு, க.நாகராஜ் ஆகியோர் முன்னிலையில், கூடலூர் நகர கழக செயலாளர், நகர்மன்ற தலைவர் அ.அறிவரசு, வீரபாண்டி பேரூர் கழக செயலாளர் வே.சுரேஷ் வரவேற்புரையில் நடைபெற்றது. இந்த ஆணழகன் போட்டியில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி ஆகியோர் போட்டியில் வெற்றி பெறும் இளைஞர்களுக்கு ரொக்க பண விருதுகள் : (அனைத்து வகைகளும்) மொத்த ரொக்க விருது : ரூ.2,50,000/ ஒவ்வொரு வகுப்பும் முதல் 10 : நினைவுப் பரிசு, சான்றிதழ், பதக்கம்: ரூ.2,50,000/ வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மு.ஜெயக்குமார், கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஏ.நந்த குமார், கழக விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர்சி.ஆர்.இராமச்சந்திரன், கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பா.அருண்குமார், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் நா.புருஷோத்தமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிரமணியன், அ.அசரப் அலி, சோமு (எ) த.சந்தோஷ், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.பி. நாகராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வி.சி. ஆறுக்குட்டி, கோவை மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ.அசோக், பி. செந்தில், எஸ்.ஜெயந்தி, பொருளாளர் எஸ்.அப்துல் ரகுமான், மாவட்ட கவுன்சிலர் இ.ஆனந்தன். தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் ஆர்.நடராஜன், சென்னை பழனிசாமி உள்பட ஒன்றிய, நகர, பகுதி,பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இளையவரின் பிறந்தநாள்; ஊர் போற்றும் பெருநாள்!



இனியவரே,
இளையவரே,
தமிழகத்தின்
துணை முதல்வரே,
தரணி போற்றும் தலைவரே,
தலைமைக்கு சிறந்தவரே,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

பெருங்காற்றும்
பெருமழையும்
வரும்முன்பு
வந்து நின்றாய்,
பெய்த மழை
காணமல் போனது,
பெருங்காற்றும் அடங்கிப்போனது,
தற்குறி காளான்களும்
தரைமட்டமானது,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

திட்டங்களை பார்க்கின்றாய்,
திட்டமிட்டு பார்க்கின்றாய்,
அடுக்கடுக்காய் ஆய்வுக்
கூட்டங்கள்
அறிவாய்
நடத்துகின்றாய்,
அரசு அலுவலர்களை
அரவணைத்(தாய்)
பணிகள் விரைந்து முடித்து,
மடிப்புகை மைனாரிட்டி
தலைவர்களை திணறவைத்தாய்,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

சமத்துவம் பேசுகிறாய்,
சனாதனமும் பேசுகிறாய்,
ஆரியத்தை அர்ச்சனை
செய்கின்றாய்,
திராவிடத்தை தீட்டி
வருகின்றாய்,
ஒன்றியம் எதிர்ப்பு பேசுகிறாய்,
இளைஞர் அணியை
இறுகணைக்கின்றாய்,

இலக்கணம் பேசுகிறாய்,
அரசியல் கூட்டங்களில்
எதிரணியை
இடித்தும் பேசுகிறாய்,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

உன் சனாதானம்
பெரியாரைப் போற்றுகின்றது,
பேராற்றல்
தலைவரை நினைவூட்டுகிறது,
துணிவு
தளபதியை முன்நிறுத்துகின்றது,

விளையாட்டுத் துறையில்
விளையாட்டு திடல் பெருகியது,
தங்கங்கள் குவிகிறது,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,



**த.சௌந்தர்**
திருமுல்லைவாயில்





புதுக்கோட்டை வடக்கு மாவட்ட. தி.மு.க.சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கரம்பக்குடி பேரூர் கழக செயலாளர் உ.முருகேசன்,வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முத்துகிருஷ்ணன் கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

### சேலம் மாவட்டத்தில் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்களில்

# 24,219 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சேலம், டிச. 1 –

ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (29.11.2025) நடைபெற்று வரும் ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை யில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 16 மருத்துவ முகாம்களில் 10,372 ஆண்களும், 13,847 பெண்களும் என மொத்தம் 24,219 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்று உள்ளனர். இதில் 19,208 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 16,706 நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், 2,408 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 2,606 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 1,953 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் 29.11.2025 இச்சிறப்பு மருத்துவ முகாமானது ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்ட 12 மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

